உ

சிவமயம்



## அமரர். மலர்வண்ணன் தர்சினி

அவர்களின்

# 45ம் நாள்

# நினைவு மலர்

# சமர்ப்பணம்

குடும்பம் என்னும் கோயிலில்
குலதெய்வமாய் இருந்து
கண்ணின் இமைபோல் எம்முடன் வாழ்ந்து
எல்லோர் மனங்களிலும் உங்கள்
நினைவுகளை தந்துவிட்டு
இன்று விண்ணுலகில்
சிவத்துடன் சங்கமித்து விட்ட
எம் இல்லத்தின் ஒளி விளக்கு
இறைவன் திருவடிகளின் ஆத்மசாந்தி
பெற வேண்டுமென உள்ளன்புடன்
இந்நினைவு மலரை
எம் கண்ணீருடன் அவர்
பாதக் கமலங்களுக்கு சமர்ப்பிக்கின்றோம்.

**இங்ஙனம்**

**குடும்பத்தினர்**

உ

சிவமயம்

# பஞ்சபுராணம்

திருச்சிற்றம்பலம்



## விநாயகர் துதி

ஐந்துக் கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

## தேவாரம்

சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்
தமிழோடிசை பாடல் மறந்தறியேன்
நலந்தீங்கிலும் உன்னை மறந்தறியேன்
உன்னாமம்என் னாவில் மறந்தறியேன்
உலந்தார்தலை யிற்பலி கொண்டுழல்வாய்
உடலுள்ளுறு சூலை தவிர்த்தருளாய்
அலந்தேன்அடி யேன்அதி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே

# திருவாசகம்

குறைவிலா நிறைவே கோதிலா அமுதே
ஈறிலாக் கொழுஞ்சுடர்க் குன்றே
மறையுமாய் மறையின் பொருளுமாய் வந்தென்
மனத்திடை மன்னிய மன்னே
சிறைபெறா நீர்போல் சிந்தைவாய்ப்பாயும்
திருப்பெருந்துறையுறை சிவனே
இறைவனே நீயென் உடலிடங் கொண்டாய்
இனியுன்னை யென்னிரக் கேனே.

# திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே! உவப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

# திருப்பல்லாண்டு

சீரும் திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன்
பெற்றது ஆர்பெறுவார் உலகில்
ஊரும் உலகும் கழற உழிறி
உமை மணவாளனுக்கு ஆள்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம்
பல்லாண்டு கூறுதுமே

# திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு
வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும்
பிறப்புண்டேலுன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும்
வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவா நீ ஆடும் போதுன்
அடியின் கீழிருக்க வென்றார்.

# திருப்புகழ்

பத்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறனைப் பெரு வாழ்வில்
முத்தியே சேர்வதற்கு அருள்வாயே
உத்தமா தானசற் குணநேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞான சத்தினிபாதா
வெற்றி வேலாயுத பெருமானே

# வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன் முறையரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

### திருச்சிற்றம்பலம்

# திருமந்திரம்

அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ(து) ஆரும் அறிகிலார்
அன்பே சிவமாவ(து) ஆரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்து இருந்தாரே.

# அமரர் திருமதி. மலர்வண்ணன் தர்சினி அவர்களின் வாழ்க்கை சரித்திரம்

இந்து சமுத்திரத்தின் முத்தாய் விளங்கும் எழில் நிறைந்த ஈழத்திருநாட்டின் புனிதத் தலமாய் விளங்கும் திருக்கோணேசப் பெருமான் எழுந்தருளி அருள்பாலிக்கும் திருகோணமலையில் முள்ளிப் பொத்தானை எனும் ஊரில் ஸ்ரீமான் விஜயகுமார், அமரர்.பானுமதி தம்பதியினரின் தவபேற்றின் பயனாக 1979 ம் ஆண்டு கார்த்திகை மாதம் 28ம் நாள் மூத்த புத்திரியாக தர்சினி எனும் திருநாமம் கொண்டு இப் புண்ணிய பூமியிலே அவதரித்தார். அவரின் உடன் பிறப்புக்களாக தர்சனன், சிவதர்சன் ஆகியோர் மிகவும் அன்பாகவும் பாசமாகவும் இறைவனடி சேரும் வரை அன்னாருடன் வாழ்ந்து வந்தனர் மற்றும் அன்னார் தனது அத்தைமார் சூரியகுமாரி, சுகந்தி இருவருடனும் இணைபிரியா தோழியாய் சிறுவயது முதல் வாழ்ந்து வந்தார்.

அன்னார் தனது கல்வியை தி/செல்வநாயகபுரம் இந்து மகா வித்தியாலயத்தில் கற்றார். மங்கை நல்லாளாக வளர்ந்து வரும் வேளையில் தர்சினிக்கேற்ற மணாளனாக யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அமரர்.சதாசிவம் மலர் தம்பதிகளின் மூத்த புதல்வனான மலர்வண்ணன் அவர்களை 1998ம் ஆண்டு திருமணம் செய்து வைத்தனர். மங்கலம் என்பது மனைமாட்சி அந்த இனிய மங்கலப் பேற்றை பெற்ற மலர்வண்ணன் தர்சினி தம்பதியினர் இல்லறத்தை இனிதே நடத்தி வந்தனர். தர்சினி அவர்கள் மலர்வண்ணனை கரம் பற்றிய வழியில் மணிவண்ணன், மதிவண்ணன், மகிழ்வண்ணன், மயூரவண்ணன், மகிழ்வாணி ஆகியோருக்கு அன்னைக்கு நிகரான அண்ணியாகவும் அன்பாகவும் பாசமாகவும் வாழ்ந்து வந்தார்.

அன்னார் உரிய வயதில் பிள்ளைகளின் வாழ்க்கையை மெருகேற்றுவதற்காக மூத்த மகள் பவித்திராவை சுயதொழில் கற்கை நெறி படிப்பதற்காகவும் மற்றும் ஸ்ரீ நாகம்மா அறநெறி ஆசிரியையாகவும் கடமையாற்றுவதற்கு உறுதுணையாக இருந்தார்.

அத்துடன் இரண்டாவது மகள் பார்கவி தனது தாயின் ஆசையை நிறைவேற்றுவதற்காக உயர்தர பெறுபேற்றில் சிறந்த பெறுபேற்றை பெற்று யாழ் பல்கலைக்கழகத்தில் தனது பட்டப்படிப்பை கற்றுக் கொண்டிருந்தார். இருந்தும் குடும்பப் பொறுப்பை குறைக்கும் முகமாகவும் பட்டப்படிப்பை தொடர்வதற்காகவும் பிரித்தானியா செல்ல ஆசைப்பட்டார். பல கஷ்டத்தின் மத்தியிலும் அதை மிகுந்த சிரத்தையுடன் நிறைவேற்றினார். இளைய மகள் பார்மிலாவும் உயர்கல்வியில் சிறந்த பெறுபேறு எடுத்து பட்டப்படிப்புக்கு விண்ணப்பம் அனுப்பி வருகைக்காக காத்திருந்தார். தனது புதல்விகள் கல்வியில் சிறந்தவர்களாக விளங்குவதற்காக மிகவும் பாடுபட்டார்.

அன்னார் தன் மகன் மீது தீராத ஆசை கொண்டவர். செல்ல மகன் மதுர்ஷன் அவரது எதிர்கால நோக்கம் கருதி அவரையும் தொழில் நுட்ப கல்லூரியில் சேர்த்தார். புதல்வர்களின் தேவைகளை அறிந்து பூர்த்தி செய்வதோடு மிகவும் பாசமாகவும் நேசமாகவும் வளர்த்து வந்தார்.

அன்னார் கடைசி வரையும் சுறுசுறுப்பாகவும் கலகலப்பாகவும் கடமைகளை ஆற்றி வந்தார். அன்னார் எல்லோருடனும் இன்முகம் காட்டி இனிய வார்த்தைகளை பேசி அன்புரிமையுடன் பழகுவார். தன் பிள்ளைகளைப் போலவே மைத்துனர்கள், மைத்துனிமார், உற்றார், உறவினருடன் அன்போடு வாழ்ந்து வந்தார். அன்பால் அனைவரையும் அரவணைத்து வீட்டுக்கு வந்தாரை விருந்திட்டு உபசரித்து உள்ளன்புடன் பழகும் உயர்ந்த குணம் மிக்கவர். இவரது இறுதி

அஞ்சலி நிகழ்வில் திரண்ட மக்களும் எந்த இடஞ்சலுமின்றி கடமைகளை செய்து முடிக்க ஒத்துழைத்த இயற்கையும் சாட்சி எனலாம்.

இவ்வாறாக ஒரு நல்ல மகளாக சிறந்த சகோதரியாக உயரிய மனைவியாக உன்னத தாயாக பாசமிகு மைத்துனியாக பல்வேறு சிறந்த பரிமானங்களுடன் வாழ்ந்து வந்த தர்சினி அவர்கள் குறுகிய காலத்தில் நோய் வாய்ப்பட்டார். அவரை அருகிலிருந்து கணவர், மகள்கள், மகன் அக்கறையுடன் பராமரித்து வந்தனர். ஆயினும் விதியின் வசமாக அத்தான் எனக் கணவனின் மடியில் படுக்க தான் பெற்ற இரண்டு பெண் பிள்ளைகளும் ஒரு ஆண் பிள்ளையும் தாகம் தீர்க்க இரண்டாவது மகள் அலைபேசியில் அம்மா என அழைக்க தோழிகளான அத்தைமார் சூரியகுமாரி, சுகந்தி ஆகிய இருவரின் கரங்களை பற்றிப் பிடித்த படியே தனது 44வது வயதில் 25.01.2024 வியாழக்கிழமை (மு.ப 3.00 மணியளவில்) இப்பூவுலகை விட்டு புகழுடல் எய்தி எல்லாம் வல்ல தில்லைக் கூத்தனின் திருத்தாள்களில் தன்னை இணைத்துக் கொண்டார்.

“வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்”

ஒரு மனிதன் எப்படி வாழ வேண்டும் என முன்னுதாரணமாக வாழ்ந்து காட்டியவர். எம் மனதில் என்றும் எமை நடத்துவார் என்பது நிச்சயம்.



ஓம் சாந்தி ! ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !!!

(குடும்பத்தினர்)

# கணவர் புலம்பல்

ஆறுதல் வார்த்தை சொல்லி
ஆருயிராய் இருந்தவளே
அன்பை அள்ளித் தந்து
அநாதையாய் விட்டு விட்டாய்

அருகில் நீயிருந்தாய்
ஏது துன்பம் என்னருகில்
கனவில் கூட வரவில்லையே
கனப் பொழுதும் விடியவில்லை

அத்தான் என்று அழைத்திடுவாய்
அறுசுவையால் அலங்கரிப்பாய்
தர்சி என்று அழைக்கின்றேன்
எட்டியும் பார்க்கவில்லை

கடவுள் தான் இணைத்து விட்டான்
கனப்பொழுதில் பிரித்துவிட்டான்
நீ நடந்த இடமெல்லாம்
உன் முகமே தெரிகிறது

தாயிழந்த குஞ்சாக
தவிக்கின்றன நம் பிள்ளைகள்
ஆறுதல் சொல்ல முன்பே
அழுகை தான் வருகிறது

நீ இல்லை என்பதை
என் மனம் நம்பவில்லை
காலை விடிந்தவுடன்
கண்கள் உன்னைத் தேடுதடி

மறுஜென்மம் என்றிருந்தால்
மனைவியாய் வந்து விடு
மரணத்தின் பிடியிலும்
ஒன்றாக இணைந்திடுவோம்



**கணவர்**
**ச.மலர்வண்ணன்**

# பிள்ளைகள் புலம்பல்

அம்மா: முடியவில்லை அம்மா எங்களால் முடியவில்லை
எங்கள் மீது அன்பு கொண்ட உறவுகளுக்காக
புன்னகைக்க முயற்சிக்கின்றேன்
நீங்கள் புகைப்படமாக எங்கள் முன் இருக்கையில்
நாங்கள் எவ்வாறு தாயே! புன்னகைப்போம்

அனைத்தையும் கற்பித்து தந்த நீங்கள் உங்கள் மரண வலியில்
இருந்து விடுபட எமக்கு ஒரு வழியும் சொல்லித் தரவில்லை அம்மா
காலம் உங்கள் மரணத்தை நியாயப்படுத்தினாலும்
அதற்கென்ன தெரியும் உங்கள் பிள்ளைகள்
நாங்கள் அநாதை என்று

ஆயிரம் சொந்தங்கள் அனைத்திட இருந்தாலும்
அன்னையே உங்கள் இடத்தை நிரப்ப யாரால் முடியும் அம்மா
கஷ்ட துன்பத்துடன் சிரித்து வாழ்ந்தாய் தெய்வமே
உங்களை பார்த்து நாங்களும் சிரித்துப் பழகினோம்
கஷ்ட காலத்திலும் கூட,
முடிவில் அழியாத்துன்பம் தந்து சென்றது ஏன் அம்மா

உங்கள் கஷ்டம் தீர்த்து, உங்கள் ஆசைகளை நிறைவேற்ற
உங்கள் ஆசியுடனும், ஆசையுடனும் கடல் கடந்து
வந்த என்னை கடைசி நொடியில் காணாமற்
சென்றது ஏன் தாயே!

நீங்கள் கேட்டதை எல்லாம் இனி யாருக்கு செய்வேன் அம்மா!
நீங்கள் மட்டும் இறந்து விட்டீர்கள் என்று நினைக்கிறார்கள்
நீங்கள் இன்றி நாங்கள் ஐவரும் உயிர் இருந்தும்
நடைபிணமாய் திரிவதை உங்களை அன்றி யார்
அறிவார் தாயே!

இறப்பு எப்படி என்பதை தினம் தினம் உங்கள்
பிரிவால் உணர்கின்றோம் அம்மா!
உங்கள் பிரிவால் நாங்கள் வாடுவதை விட எங்களைப் பிரிந்து
விட்டோம் என்று நீங்கள் தினம் தினம்
கலங்குவது உணர்கின்றோம் அம்மா!
அலங்காரமில்லா தெய்வமே உங்களை அலங்கரித்து பார்க்க
நினைத்த உங்கள் பிள்ளைகளை
மீளாத்துயரில் வீழ்த்து விட்டாய் அம்மா!



**பிள்ளைகள்**
**ம. பவித்திரா**
**ம.பார்கவி**
**ம.பார்மிலா**
**ம.மதுர்ஷன்**


# ஐயாவின் ஏக்கம்

ஆசைக்கோர் பெண் பிள்ளை என்று
ஆசை ஆசையாய் வளர்த்தேனே
நீயோ ஐயா ஐயா என்று அல்லும் பகலும்
கூப்பிடும் ஓசை என் காதில் கேட்கிறதே

எனை விட்டுச் செல்ல
எப்படித்தான் மனம் வந்ததோ
எனை நீ பார்ப்பாய் என்றிருந்தேன்
என்னை தனிமரமாய் விட்டு விட்டு

அம்மாவுடன் நீ சேர்ந்து விட்டாய்
நானோ இருவரின் ஆத்மா சாந்தியடைய
நித்தமும் இறைவனை வேண்டுகிறேன்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி



**ஐயா**
**சி.விஜயகுமார்**


# தூரமிருந்தாலும் என்றும் உன் அருகில்

பாசத்தின் உறைவிடமே பண்பின் ஒளி விளக்கே
தன்னலம் பாராது உன் பிள்ளைகள்
தரணியிலே தலை சிறந்து வாடி வேண்டி
ஓடாய் தேய்ந்து ஆகவேண்டிய
அனைத்தையும் செய்தேனே சித்திரக்கா

இனி உன் பிள்ளைகளுடன் சீரும் சிறப்புமாய்
சந்தோசமாய் இருப்பாய் என்றிருந்தேன்
ஆனால் நீயோ எல்லோரையும் சிந்திக்க விட்டு
அம்மாவின் மடியில் அமைதியாய் உறங்கிறீயோ சித்திரக்கா

நித்தம் உங்கள் ஆன்மா சாந்திக்காக பிராத்திக்கின்றோம்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி



**முத்த தம்பி**
**வி.தர்சனன்**
**(அவுஸ்ரேலியா)**

# சிலையான சித்திராக்காவே

நிறைகுடம் போல் முன் நின்று
நிறைமனதுடன் உன் கடமைதனை
நிறைவேற்றும் என் சித்திரக்காவே

ஆசைக்கோர் அக்காவாய்
அவனியிலே அவதரித்தாய்
அல்லலுறும் வேளையிலே
ஆதரவாய் நீ இருந்தாயே சித்திரக்கா

நீயின்றி நிற்கதியாய்
நிற்கின்றேன் இப்புவியிலே
நித்தமும் உன் நினைவால் தவிக்கின்றேன்
உனக்கு இணையாய் மற்றொரு தெய்வம்
இத்தரணியில் உண்டோ சித்திரக்கா?

சிவா சிவா என்றழைப்பாய் இப்போ
சிவனடி சேர்ந்து விட்டாய்
சித்திரக்கா நித்தமும் உன் நினைவால் வாடுவேன்

உன் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறேன்
ஓம் சாந்தி சாந்தி சாந்தி

**இளையதம்பி**
**வி.சிவதர்சன்**

# நற்குணங்களின் நாயகி

அலைபேசியை எடுத்தவுடன்
அலை அலையாய் தோன்றுகிறது
உங்கள் எண்ணம்
கள்ளமில்லா வெள்ளை உள்ளம்
கலகலப்பான சிரிச்சமுகம்
அன்பான பேச்சும் என் கண்முன்னே
தோன்றுகிறது சித்தி

நோய் என்று படுத்தது நான் அறியேன்
நொடிப்பொழுதில் எமையெல்லாம்
விட்டு விட்டு நித்திய உறக்கம்
ஆனது ஏனோ...........

நித்தமும் உங்கள் ஆத்மா சாந்திக்காக பிராத்திக்கின்றோம்
ஓம் சாந்தி சாந்தி சாந்தி

**மைத்துணி**
**த.சிவசோபா**

# என் அருமை மச்சாளே

நான் திருமணம் முடித்து வந்த போது
அகம் மலர்ந்து பிள்ளை என
வாயார கூப்பிட்ட மச்சாளே
எமை விட்டு எங்கு சென்றீர்

தயாள குணமும் தன்னலமும் கருதாது
தன் பிள்ளைகளைப் போல்
என்னையும் தாயின் மேலாய் பார்த்தாயே - மச்சாள்

பண்பின் சிகரமாய் பாசத்தின் பிறப்பிடமாய்
எல்லோருக்கும் நல்லவராய் வாழ்ந்து எல்லோரையும் ஏங்க
வைத்துச் சென்றீரே மச்சாள்

என் நெஞ்சில் நிழலாடும் உங்கள் உருவம்
எங்கள் மனங்களில் என்றும் நிலைத்திருக்கும்
சூரியன் போல் ஒளிர்ந்த நீங்கள்
சூட்சுமமாய் மறைந்ததேனோ

உங்கள் ஆத்மா சாந்தியடைய தினமும்
இறைவனை வேண்டுகின்றேன்

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

**மைத்துணி**
**சி.துவாரகா**

# அத்தையின் ஆசி வேண்டி மருமக்கள்

முருகன் முருகன் என நினைத்து
முருகன் கோயிலிலே விரதமிருந்தாய்
உன் இறுதி நேரத்திலாவது
எங்களால் உங்களை பார்க்க முடிந்தது

முருகனின் காட்சியை ஏற்று
நட்சத்திரத்தின் ஒளி வடிவாய்
சாய் அப்பாவின் திருவடிகளில்
அத்தையின் ஆத்மா சாந்தியடையட்டும்

ஓம் சாந்தி சாந்தி சாந்தி



**மருமக்கள்**

**த.லதுர்ஷயன்**

**த.சாய்ஸ்ரீ**

**த.நட்சத்திரா**

# பாசத்தோடு எமை வளர்த்த அத்தையே

அத்தை அத்தையென நாம் ஓடி வந்தால்
ஆனந்தமாய் கட்டியணைத்து முத்தமிட்டு
ஆகாரங்கள் பல ஊட்டி
ஆதரித்து காத்து வளர்த்தீரே அத்தை

எம் மழலை சொல் கேட்டு எம் குறும்புகளை
இரசித்து மகிழ இனியார் உள்ளார் அத்தை
அப்பா அம்மாவின் மறுவடிவமாய் நீ இருந்தாய்
இப்போ அநாதரவாய் தவிக்கின்றோம்
அத்தையே

எப்போதும் உங்கள் நல்லாசிகள் கிடைக்க
எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறோம்

ஓம் சாந்தி சாந்தி சாந்தி



**சி.லிசாதனா**
**சி.அபிமன்யு**
**சி.அபிசாதனா**

# மாமியார் புலம்பல்

மருமகளாய் என் வீட்டில் அடி எடுத்து வைத்தாய்
காலம் செல்ல செல்ல மருமகள் நீ என் மகளாய் ஆனாய்

இவ்வளவு எளிதில் என் மகளை இறைவன் பறித்திடுவான்
என்று கனவிலும் எண்ணியதில்லை

உன்னை இழந்த வீடு
மயான அமைதியாய் உள்ளது.

மீண்டும் உன் குரல் எம் காதுகளில் கேட்டிடாதா?
என்று காத்திருக்கிறேன்

உன் நினைவிலே உனை சேரும் வரம் வேண்டும்.
எம் வீட்டு தேவதையே.. கலங்காமல் சென்று வா...

வஞ்சனை மிகுந்த கயவர் வாழும் பூமியில்
நீ கண்ட துன்பங்கள் நீ

செல்லும் உலகில் இருக்காது.
சென்று வா மகளே!! சென்று வா!!

**அத்தை**
**ச.மலர்**

# உடன் பிறவா சகோதர சகோதரிகள் புலம்பல்

உடன் பிறக்கவில்லை ஆனால் தங்கை
என்ற மொத்த உரிமையும் கொடுத்தாய்
சின்ன சின்ன கூறும்புச் சண்டைகள் இட்டோம்
ஆனால் எப்போதும் எமக்குள் பிரிவு வந்ததில்லை

அது தான் பொறாமை கொண்டானோ காலன் அவன்
உனை என்னிடமிருந்து வெகு விரைவில் பிரித்து விட்டான்..
என் பிள்ளைகள் பெரியம்மா எப்ப வருவா?
என்று தினமும் கேட்கின்றனர்

அவர்களுக்கு என்ன பதில் நான் கூறுவேன்
சுவற்றில் தொங்கும் ஒற்றை புகைப்படத்தை
காட்டி சாமியிடம் வரம் வாங்க சென்றாய்
என்றே கூறி அவர்களை சமாதானம் செய்கிறேன்

கடவுள் என்னிடம் வரம் கேட்டால்
அக்கா நீ மட்டும் திரும்பி வர வேண்டும்
என்பதையன்றி வேறென்ன நான் கேட்பேன்.
அக்கா.... நீ பிரிந்தாலும் என்றும் உன் நினைவுகளுடனே நாங்கள்..

**ம.பிறேமகாந்தி**
**கௌ.மதுராந்தகி**

# அண்ணி

அண்ணி என்றால் அன்னையின் வடிவமோ
பிள்ளை என்று அழைத்து எனை
சிறு புன்முறுவல் பூத்து நகைத்து
மகிழ்வீர்களே அண்ணி !

உங்கள் இல்லமதில் வந்து நாம் தங்க
வைகறையில் எழுந்து அடுப்படியில்
அடிசில் தனை சமைத்து
சுவைத்து உண்ண வைப்பீர்களே அண்ணி !

மாமனாருடன் செல்லமாய் கேலி செய்து
புன்முறுவல் கொள்வீர்களே
அதுதான் என் தந்தையிடம் சென்றீர்களோ
உவகை கொண்டு அண்ணி

ஆதவனின் வருகைக்காய் மலராமல்
காத்திருக்கும் அம்புயம் போல் - என்
மருமக்களின் வதனமும் வாடி நீங்க
காண்கின்றோம் அண்ணி !

**அன்பு மைத்துனன்**
**மணிவண்ணன்**
**மகிழ்வண்ணன்**
**மயூரவண்ணன்**
**மகிழ்வாணி**

# உற்றார் உறவினர் புலம்பல்

இரக்ககுணம் கொண்டவளாய்த் தானிருந்தாய்
ஈகைமனம் மிக்கவளாய் உலவிவந்தாய்
சிறப்பான வாழ்வியலில் தடம்பதித்தாய்
சிக்கல்களைச் சிரிப்பாலே வென்றிருந்தாய்!

அயலவரைச் சுற்றமென நினைத்திருந்தாய்
அன்பான வார்த்தைகளை விதைத்திருந்தாய்
பயபக்தி யுடன்இறையை வணங்கிவந்தாய்
பணிவிடைகள் செய்வதிலே தனித்திருந்தாய்!


பொறுமையெனும் ஆழியிலே குளித்திருந்தாய்
பொறாமைப்பற்றோ மனத்தோடு மகிழ்ந்திருந்தாய்
வறுமையிலும் செம்மையுடன் வாழ்ந்திருந்தாய்
வரலாற்றில் தனியான இடம் பிடித்தாய்!

பிள்ளைகளில் அளவில்லாப் பிரியம் வைத்தாய்
பெயர்சொல்லும் உரிமையது கொண்டிருந்தாய்
நல்லபடி நானிலத்தில் வாழ்ந்திருந்தாய்
நயனங்கள் நீர்சொரிய நீ பிரிந்தாய்!

**உன் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.....**

# நன்றி நவிலல்

**எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி மீளாத்துயில்
கொள்ளும் எமது அன்புத் தெய்வம் இயற்கை
எய்திய செய்தி கேட்டு உடனே சமூகந் தந்து
ஆறுதல் கூறியும், வேண்டிய உதவிகள் புரிந்தும்,
ஈமைச்சடங்கிற்கு, வேண்டிய ஏற்பாடுகளைக்
கவனித்தும், ஏனைய வழிகளிலும் பற்பல உதவிகள்
புரிந்து எமக்கு ஒத்துழைத்த உற்றார், உறவினர்,
அயலவர், நண்பர்கள் மற்றும் தொலைபேசிமூலம்
ஆறுதல் தெரிவித்தோர்க்கும், இறுதிக்கிரியைகள்,
சபிண்டீகரணக்கிரியை, வீட்டுக்கிரியை என்பவற்றில்
கலந்து கொண்டு ஆன்ம ஈடேற்றத்திற்காய்
பிரார்த்தித்து ஒத்துழைப்பு நல்கிய அனைவர்க்கும்
எங்கள் இதய பூர்வ நன்றியைத் தெரிவித்துக்
கொள்கின்றோம்.**



இவ்வண்ணம்
குடும்பத்தினர்